

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் (09.01.2026) நடைபெற்ற அரசு விழாவில், தமிழ்நாடு அரசின் “உங்க கனவ சொல்லுங்க” திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்ற விழா நிகழ்வில் அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் கலந்து கொண்டு தன்னார்வலர்களுக்கு கைபேசி இணைப்பு, விண்ணப்பப் படிவம், அடையாள அட்டை, தொப்பி கனவு அட்டைகளை வழங்கினர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், கொண்டப்பநாயக்கன்பட்டியில் செவித்திறன் குறைபாடு உடையோருக்கான அரசு உயர்நிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள டாக்டர் குமரன் அப்புசாமி நினைவு விளையாட்டுப் பூங்காவினை நேற்று முன்தினம் (09.01.2026) திறந்து வைத்து, மாணவ, மாணவியர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், மாவட்ட மாற்றுத்திறனாளி அலுவலர் திருமதி செண்பகவள்ளி, மாவட்ட நீதிபதி (ஓய்வு) வேணுகோபால், டென்னீஸ் நண்பர்கள் குழு உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வலர்கள் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

# கரூர் மாவட்டத்தில் 3,33,624 குடும்ப அட்டைதாரருக்கு பொங்கல் பரிசு!

## வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கி தொடங்கி வைத்தார்!

கரூர், ஜன.11–

கரூர் மாவட்டத்தில் 3,33,624 அரிசி குடும்ப அட்டை தாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டு வருகிறது. விநியோகத்தை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி சோமூர் நியாய விலைக் கடையில் தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 08.01.2026 அன்று தமிழ்நாட்டிலுள்ள அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பை வழங்கி தொடங்கி வைத்ததை அடுத்து கரூர் வட்டம். சோமூர் நியாய விலைக் கடையில், கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி, மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமையில் பொங்கல் பரிசு தொகுப்பை வழங்கி கரூர் மாவட்டத்தில் விநியோகத்தை தொடங்கி வைத்தார்.

பின்னர் கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில்பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் மாவட்டத்தில் உள்ள 734 நியாயவிலைக்கடைகள் மூலம் 3.33,624 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை. 1 முழு நீளக் கரும்பு. ரூ.3.000 ரொக்கம் மற்றும் வேட்டி சேலை என மொத்தம் ரூ.100,08,72000 மதிப்பில் பொங்கல் பரிசு தொகுப்புடன் வழங்கக்கூடிய நிகழ்வு, தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டத்தில் பொது மக்கள் முக மலர்ச்சியாக, மிக மகிழ்ச்சியுடன் முதலமைச்சர் அவர்களின் வழங்கிய பொங்கல் பரிசு தொகுப்பை பெற்றுச்சென்று கொண்டிருக்கின்றார்கள். இந்த ஆண்டு பொங்கல் என்பது மக்களுக்கான ஒரு எழுச்சிமிகு பொங்கலாக அமைந்துள்ளது.

கரூர் சட்டமன்றத் தொகுதியில் 86.682, அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் 80.672, குளித்தலை சட்டமன்றத் தொகுதியில் 85.416, கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் 80.854 குடும்ப அட்டைதாரர்களும் என மொத்தம் கரூர் மாவட்டத்தில் மொத்தமாக 3.33,624 குடும்ப அட்டைதாரர் களுக்கும் இன்று முதல் வருகின்ற 14.01.2026 வரை வழங்கப்படவுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கரூர் மாவட்டத்தில் குறிப்பாக அமராவதி ஆற்றின் குறுக்கே ரூ. 15.கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் இணைப்புச் சாலைக்கு பணி ரூ. 11 கோடி நிதியை விடுவித்து உள்ளார்கள். சுற்றுவட்டச் சாலை அமைப்பதற்காக முதற்கட்டமாக ரூ.72 கோடி நிதி நில எடுப்பு பணிக்கும், செல்லிபாளையம். சோமூர் பகுதிகளில் போக்குவரத்து நெரிசலை குறைக்க சாலை விரிவாக்கப் பணிகளுக்காக ரூ.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளில் அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்த சுமார் 4500 கோடி மதிப்பிலான பணிகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார்கள். அதேபோல நெரூர் உன்னிபூர் இணைக்கக்கூடிய வகையில் காவிரி ஆற்றின் குறுக்கே ரூ.101 கோடி மதிப்பீட்டில் உயர்மட்ட பாலம் பணிகள் முடிவடைந்துள்ளது. விரைவில் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைக்க உள்ளார்கள் என்று குறிப்பிட்டார்.



கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியம், ஒரப்பம், அஞ்சூர் ஆகிய ஊராட்சிகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, ஒரு முழு நீளக் கரும்பு மற்றும் ரொக்கம் ரூ.3,000 அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்புகள் மற்றும் வேட்டி, சேலைகள் ஆகியவற்றை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் ஆகியோர் துவக்கி வைத்தனர். உடன் மாவட்ட துணை செயலாளர் சாவித்திரி கடலரசு மூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் நாகராசன், ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன் அறிஞர் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு!

### திருப்பத்தூர் மாவட்டம்

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் செயலாளர் ஒப்புதலோடு திருப்பத்தூர் மாவட்டம் மறுசீரமைக்கப்பட்டதால் ஏற்கனவே கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்ட சி. குணசேகரன் அவர்கள் வேலூர் தெற்கு மாவட்ட நிர்வாகத்தில் வருவதால் அவருக்கு பதிலாக **ம. பிரபு** (1/117, அண்ணா நகர், குருசிலாப்பட்டு கிராமம் மற்றும் அஞ்சல், திருப்பத்தூர் தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம் - 635702) அவர்கள் திருப்பத்தூர் மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளராகவும்,

ஏற்கனவே கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட ஆம்பூர் பொய்யமொழி மறைவெய்திய காரணத்தினால், **கு. கலைமூர்த்தி** (தாமலேரிமுத்தூர் கிராமம் மற்றும் அஞ்சல், திருப்பத்தூர் தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம் - 635853) மற்றும் **சி. ஆனந்தன்** (6/17, நாயணசெருவு கிராமம் மற்றும் அஞ்சல், நாயணசெருவு ஊராட்சி, நாட்றம்பள்ளி தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம் - 635852) ஆகியோர் திருப்பத்தூர் மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

### தஞ்சை தெற்கு மாவட்டம்

தஞ்சை தெற்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் கா.பழனிவேல் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், **ஆர்.பாலா (எ) பாலமுருகன்,** எம்.பி.ஏ., (85-ஏ, பெருமாள் கோவில் தெரு, பட்டுக்கோட்டை, தஞ்சை மாவட்டம் - 614 601.) அவர்கள் தஞ்சை தெற்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 08-01-2026.

**வாகை சந்திரசேகர்**
தலைவர்
தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

## ஈரோடு தெற்கு மாவட்டத்தில்

# திராவிடப் பொங்கல் விழாவை முன்னிட்டு மகளிர்க்கான திருவிழா - பல்வேறு போட்டிகள்!

## அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் ஏற்பாட்டில் நடைபெறுகிறது!

ஈரோடு, ஜன. 11–

ஈரோடு தெற்கு மாவட்டத்தில் திராவிடப் பொங்கல் விழாவை முன்னிட்டு மகளிர்க்கான திருவிழா மற்றும் கழகத் தலைவரும். முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகியோர்களின் பிறந்தநாள் விழா கொண்டாட்டம். புள்ளி கோலம் ரங்கோலி கோலப்போட்டி, எம்ராய்டரி போட்டி, மெஹந்தி போட்டி, காய்,கனியில் உருவம் வடிவமைத்தல் ஆகிய போட்டிகள் ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வைத் துறை அமைச்சருமான சு.முத்துசாமி தலைமையில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் ஏற்பாட்டில் மாநகர கழகச் செயலாளர் மு.சுப்பிரமணியம் வரவேற்பில் இன்று (11.1.2026 - ஞாயிற்றுக் கிழமை), மாலை சரியாக 3 மணிக்கு, ஈரோடு, தில்லை நகர், செங்குந்தர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற உள்ளது.

நிகழ்வில் கழக துணை பொது செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே..இ. பிரகாஷ், ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், ஈரோடு மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் தோப்பு என்.டி.வெங்கடாசலம், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், மேயர் நாகரத்தினம், துணை மேயர் வி.செல்வராஜ், மண்டல தலைவர்கள் ப.க.பழனிச்சாமி, மு.ப.சுப்பிரமணியம், ப.சசிகுமார், குறிஞ்சி என்.தண்டபாணி, கோட்டை பகுதி கழக செயலாளர் பொ.ராமச்சந்திரன், மாமன்ற உறுப்பினர்கள்.பி.பிரகாஷ், புவனேஸ்வரி பாலசுந்தரம், மாநில நிர்வாகிகள் எம். கந்தசாமி, எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், குறிஞ்சி என்.சிவக்குமார், சு.ராதாகிருஷ்ணன், ஈரோடு இறைவன், வீரமணி ஜெயக்குமார், இரா.விவேக், மாவட்டக் கழக நிர்வாகிகள் கே.குமார் முருகேஸ், ஆ.செந்தில்குமார், க.சின்னையன், செல்லபொன்னி, டி.எஸ்.குமாரசாமி, ப.மணிராசு, ராஜு ( எ) முருகேசன், என்.டி.பத்மநாபன், எம்.கேசவன், நா.மகாலிங்கம், மு.பல்கீஸ், ஆர்,பொன்னுசாமி, பி.கதிர்வேல், மாநகர கழக நிர்வாகிகள் இரா.சேகரன், கே.சந்திரசேகர், கு.நந்தகுமார் (எ) விமல், இ.பாத்திமா, ஜி.சண்முகம், மு.அப்துல் ஹமீது, எஸ். சந்திரசேகர், மாரிமுத்து, சி.மணி நா.ஆறுமுகம், ப.நாகரத்தினம், க.கருப்புசாமி, பொ.அன்பழகன், திண்டல் எஸ்.துரைசாமி மற்றும் பலர் பங்கேற்கின்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் சிறப்பாக செய்து வருகிறார்.



பொள்ளாச்சி நகரம் 13வது வார்டுக்குட்பட்ட நியாய விலைக் கடையில் முதல்வர் அவர்களால் வழங்கப்படுகின்ற பொங்கல் தொகுப்பு மற்றும் ரூ.3000 ரொக்கப் பரிசை வழங்கும் நிகழ்வை கழக சட்டதிட்டத் திருத்தக் குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் துவக்கி வைத்தார். நிகழ்வில் வட்டக் கழகச் செயலாளர் பூவை செல்வராஜ், நகர மன்ற உறுப்பினர் மணிமாலா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல், நகர சிறுபான்மை அணி அமைப்பாளர் உசைன், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் விஜயா, கணேஷ், சக்தி, பாலகேசன், அன்புமணி, சுரேஷ், அக்னி பாபு, லேத் மணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்

## தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

# மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி மாவட்ட பொறுப்பாளர் ஒப்புதலோடு, தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை திருப்பூர் கிழக்கு மாவட்டம் மற்றும் தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருப்பூர் கிழக்கு மாவட்டம்

தலைவர் - தி. சேகர் 55, திரு.வி.க. தெரு, சென்னிமலை - 638051, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - என். அரவிந்தன் 8/9, கந்தசாமி பாளையம், நஞ்சைதலையூர், தாராபுரம் - 639202, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் - நா. மயில்சாமி 16/8, சந்திராபுரம், சடையபாளையம் அஞ்சல், குண்டடம் - 638702, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) முனைவர் எஸ். செல்லத்துரை 5-ஐ, அறிவொளி நகர், மூலனூர் - 638106, திருப்பூர் மாவட்டம். 2) எஸ். சுகந்தி 134, நாச்சிபாளையம், மூலனூர் அஞ்சல் - 638106, தாராபுரம் தாலுக்கா, திருப்பூர் மாவட்டம். 3) மு.நிதேஸ்குமார் 45ஏ, கச்சேரி வலசு, வெள்ளக்கோவில் - 638111, திருப்பூர் மாவட்டம். 4) பெ. தேசியன் 28, திருப்பூர் ரோடு, தாராபுரம் - 638656, திருப்பூர் மாவட்டம். 5) சங்கர் (எ) எ. தியாகராஜ் 2/64-1, மேற்கு வீதி, நத்தக்காடையூர், காங்கேயம் - 638108, திருப்பூர் மாவட்டம்.

### தஞ்சை வடக்கு மாவட்டம்

#### கும்பகோணம் மாநகரம்

தலைவர் - எஸ். அசோகன், 40-97, எலுமிச்சங்காபாளையமேல தெரு, தாராசுரம், கும்பகோணம் - 612702, தஞ்சாவூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - கோ. அசோகன் 25/38, ரெட்டிராயார் அக்ரஹாரம், 5வது தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

அமைப்பாளர் - குவைத் பி. ஸ்ரீதர் 38/12ஏ, காடுவெட்டித் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். செந்தில்குமார் 44, காவேரி குடியிருப்பு, பாணாதுறைபத்துகட்டுத் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 2) விக்கீஸ் சு. சரவணன் 17/12, சீத்தா தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 3) பி. பாலதண்டாயுதம் 81/45, வீரபாண்டிய கட்டபொம்மன் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 4) வி. இராமதாஸ் 1/934, யானையடி அய்யனார் கோவில் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 5) து. மகேந்திரன் 35, சிங்காரம் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 08-01-2026.

**வாகை சந்திரசேகர்**
தலைவர்
தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சிறுவேடல் வெ.கணேசன்

**சனவரி 11 (2022)**



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

ஒன்றுபட்ட செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள சிறுவேடல் கிளைக் கழகச் செயலாளர் – வாலாஜாபாத் ஒன்றிய இணைச் செயலாளர் – ஒன்றிய துணைச் செயலாளர் – மாவட்ட பிரதிநிதி என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

வாலாஜாபாத் ஒன்றியக்குழு உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

வாலாஜாபாத் நிலவள வங்கி துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.


கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றதோடு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் ‘சிறை சென்ற செம்மல்’ என்று அழைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அரூர் கே.ஆர்.சுப்பிரமணி

**சனவரி 11 (2020)**



1968ஆம் ஆண்டு பள்ளிப் பருவத்திலேயே, இந்தித் திணிப்பை எதிர்த்து மொரப்பூர் ரயில் நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு கழகப் பணியாற்றத் தொடங்கியவர்.

1974ல் அரூர் நகரில் ‘இளைஞர் தி.மு.க.’ அமைப்பை தொடங்கி மாவட்டம் முழுவதும் கழகக் கொள்கை பரப்ப துவங்கிய இவர், அரூர் ஒன்றிய துணை துணைச் செயலாளர், பேரூர்ச் செயலாளர், இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட மாணவர் அணி மற்றும் தொண்டர் அணி அமைப்பாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

கறுப்புக் கொடி போராட்டம், கைலாசம் கமிஷன் அரசாணை எரிப்புப் போராட்டம், ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம், இந்தித் திணிப்பு எதிர்ப்பு போராட்டம், கலைஞர் கைது எதிர்ப்பு மற்றும் ராணிமேரி கல்லூரி பிரச்சினையில் கழகத் தலைவர் கைது எதிர்ப்பு போன்ற கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு பல மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**